DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI

C.C.No.378/13

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name பொன்ராஜ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தேனியில் குடியிருந்து நான் நூற்பாலை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். நான் என் சகோதரர் சீனிவாசன், மற்றொரு சகோதரர் மகன்ராஜசேகரன், மற்றொரு சகோதரர் மகன் கிருஷ்ணமூர்த்தி அனைவரும் சேர்ந்து 2000த்தில் அன்னஞ்சியில் குடியிருக்கும் சரஸ்மணி, சந்திரகலா என்பவரிடம் இருந்து நிலத்தை கிரயம் வாங்கினோம். கிரயம் வாங்கிய பிறகு நாங்கள் நான்குபேரும் சேர்ந்து சுவாதினத்தில் இருந்து விவசாயம் செய்துவந்தோம். அப்போது 2001ல் ஊஞ்சாம்பட்டியில் உள்ள மீராபாய், முருகேசன் ஆகியோர்கள் எங்கள் சுவாதீனத்திற்கு இடையூறு செய்துவிவசாயம் செய்யவிடாமல் தடுத்தார்கள். அதனால் நாங்கள் பெரியகுளம் உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்எண். 288-2001 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றோம். அதன்பின்னர் தொடர்ந்து சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வந்தோம். எங்கள் பெயரில் பட்டா உள்ளது. அதன்பின்னர் எதிரிகள் பெரியகுளம் வட்டாட்சியரிடம் தவறான தகவல்கள் சொல்லி தங்களது பெயரில் மோசடியாக பட்டா பெயர் மாறுதல் செய்துக்கொண்டார்கள். அதனால் பட்டா பெயர் மாறுதல் உத்தரவிற்கு எதிராக கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு பட்டா பெயர் மாறுதல் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. அந்த ரத்து உத்தரவை எதிர்த்து எதிரிகள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள். எதிரிகள் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடியானது. அதன்பின்னர் எங்களது சொத்தை பொறுத்து வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தோம். வாங்கி பார்த்த போது மீராபாய்

என்பவரின் தகப்பனார் 1977ல் ஏற்பட்ட பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தை கொண்டு 1996ல் மீராபாய் பெயருக்கு எங்கள் சொத்தை பொறுத்து மீராபாய் பெயருக்கு தானசெட்டில் மெண்ட் எழுதி வைத்தது தெரியவந்தது. அதனடிப்படையில் மீராபாய் என்பவர் எங்கள் சொத்தை மோசடியாக மதுரையை சேர்ந்த கலாவதி என்பவருக்கு கிரயம் செய்துக் கொடுத்துவிட்டார். கலாவதி மீண்டும் செந்தில் குமார் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள். மீதமுள்ள 1.70ஏக்கர் நிலத்தை தனது கணவருக்கு 1998ல் தானம் செய்து கொடுத்துள்ளார். அதனடிப்படையில் முருகேசன் 30 செண்ட் நிலத்தை பொறுத்து பெரியகுளத்தை சேர்ந்தவருக்கு கிரயம் ஒப்பந்தம் செய்துக்கொடுத்துள்ளார். அதேபோல் 1 ஏக்கர் 70 செண்ட் நிலத்தை பொறுத்து தேனியை சேர்ந்த ஒருவருக்கு கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார். அவர்கள் பெயர் மனோகரன், அய்யப்பன். மேற்படி விபரங்கள் தெரியவந்த பிறகு நாங்கள் நால்வரும் சேர்ந்து தேனி காவல்கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். அப்புகார் மனு அசாஆ.1. அப்புகாரின் அடிப்படையில் அல்லிநகரம் போலிசார் வழக்கு பதிவு செய்து எங்களை அழைத்து விசாரித்தார்கள். அதன்பிறகு அய்யப்பன் மற்றும் மனோகரன் ஆகியோர்கள் முருகேசனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுத்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை: </u>இல்லை